# தவக்காலம் 5ஆம் ஞாயிறு திருப்பலி
# A ஆண்டு - 22 மார்ச் 2026

**தவக்காலத்தின் 5ஆம் ஞாயிறு A ஆண்டு மார்ச் 22 2026**
**முதல் வாசகம் : எசேக் 37: 12-14**
**2ஆம் வாசகம்: உரோ 8:8-11**
**நற்செய்தி வாசகம்: யோவா 11:1-45**

**கடவுள் நம்மை வாழ்விற்கு அழைக்கிறார்:**
**நம்மை இறப்பிலிருந்து வாழ்வுக்கு அழைத்து தமது திருஅவையோடு தோமைக் கொள்ளச் செய்துள்ளவருமான நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.**

**முன்னுரை :**

**இள்றைய தவக்காலத்தின் 5ஆம் ஞாயிறு திருப்பலி வழிபாட்டிற்கு உங்களை அன்போடு வரவேற்கிறேன். முன்னொரு காலத்தில் இந்த ஞாயிற்றுகிழமையை ''பாடுகளின் ஞாயிறு'' என்று அழைப்பதுண்டு.**

**நாம் இன்று இறைவனின சமூகத்தில் நம்மில் எழுந்துள்ள பல்வேறு வினாக்களுக்கு விடைக்காண வேண்டும் என்ற எண்ணத்துடன் கூடிவந்திருக்கிறோம். அவ்வினாக்கள் நமது வாழ்வும், இறப்பும், நமது அச்சங்கள், நம்பிக்கைகள், நமது உள்ளத்தில் எழும் குற்ற உணர்வுகள், அதற்காக நாம் எதிர்ப்பார்த்துக் காத்திருக்கும் மன்னிப்பு ஆகியவற்றைக் குறித்தும், அளைத்திற்கும் மேலாக நமது இறைவனைக் குறித்த தேடலை முன்னிட்டுமாக உள்ளன.**

**நிகழ்வு - சில ஆண்டுகளுக்கு முன் ஒரு மனிதர் இவ்வாறு என்னிடம் பகிர்ந்துக் கொண்டார். ''அந்த மனிதரின் வாழ்வின் ஒரு காலக்கட்டத்தில் அவரது வாழ்வே ஸ்தம்பித்து நகராது நிற்பதுப் போன்ற ஒரு நிலைக்கு வந்துவிட்டது. அச்சமயத்தில் அவர் செய்துக் கொணடிருந்த பணியிலிருந்து நீக்கப்பட்டார், அவரது உடல் ஆரோக்கியமும் சிறிது சிறிதாக கெட்டுக் கொண்டே இருந்தது, அவரது நட்பு வட்டமும் அவரை விட்டு வீழ்ச்சியடைந்து காணாமல் போனது. இந்நிலையில் அவர் ''நான் உயிரோடு புதைக்கப்பட்டவனைப் போல உணர்ந்தேன். ஆனால் நான் இறந்தவனாக உணரவில்லை மாறாக பொறியில் சிக்குண்டவனைப் போல உணர்ந்தேன். ஆயினும் அதிலிருந்து அவர் மீண்டார் ஆயிநும் அது திடீரென நிகழ்ந்த ஒரு அருங்குறியால் அல்ல. மாறாக அவரை தானாகவே முன் வந்து அவரை அழைத்த ஒரு நல்ல நண்பனின் குரல், சமுதாயததின் ஒரு குழுவினர் அவர் நிலை அறிந்து அவர் மீண்டும் வாழ்வைத் துவங்குவதற்கு விடுத்த அழைப்பே அவரை படிப்படியாக முன்னேற்றிற்று.**

**இதையொத்த ஒரு கதையே இன்றைய இறைவாக்குகள்.**
**இஸ்ரயேல் மக்கள் நாடுகடத்தலில் தாங்கள் புதையுண்டவர்களாக உணர்ந்தனர். நற்செய்தியில் இலாசரு கல்லறையில் புதையுண்டுக் கிடந்தார். நம் வாழ்விலும் சில நேரங்களில், வாழ்வின் சில பகுதிகள் நமக்கு பூட்டப்பட்டவையாகவே காணப்படுகின்றன. அவை மிக கனமாக, உளிரற்றவையாகக் காணப்படுகின்றன.**

**இன்று நாம் மனித வாழ்வின் இறுதி அத்தியாயம் கல்லறையே என்பதை ஏற்றுக் கொள்ள இயலாத ஒரு இறைவனைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்.**

**இன்றைய இறைவாக்கில் இறைவாக்கினர் வாயிலாக ''நான் உங்களின் கல்லறைகளைத் திறப்பேன்'' என்றுக் கூறும் கடவுளின் வாக்கைக் கேட்கிறோம்.**

**நற்செய்தியில் இறப்பின் எதிரே நின்றுக் கொண்டு புதையுண்டவரை நோக்கி ''வெளியே வா'' என்று அழைக்கும் இயேசுவைக் காண்கிறோம்.**

**இத்திருப்பலியில் கலந்துக் கொள்ளுமுன் நமக்குள் நாமே உண்மையோடு சிந்தித்து நாம் எந்தெந்த வழிகளில் நமக்கு வாழ்வுத் தேவை என்பதை அறிந்துக் கொள்வோம். மேலும் நாம் மற்றவர்களை எந்தெந்த நமது செயல்பாடுகளின் வழியாக அச்சுறுத்தியும்,**

தீர்ப்பளித்தும், வேற்றுமைப் படுத்தியும் அவர்களைக் கட்டுப்படுத்தி நமக்குக் கீழாக வைத்திருப்பதைக் குறித்தும் சிந்தித்துப் பார்ப்போம். இதனிமித்தம் நாம் இறைவனின இரக்கத்தை இறைஞ்சுவோம்.

மறையுரை - கடவுள் நம்மை வாழ்விற்கு அழைக்கிறார் - கல்லறையில் முடங்கியுள்ள நம்மமை புதியதொரு தொடக்கத்திற்காக அழைக்கிறார்

இந்த மறையுரையை ஒரு சிறியக் கதையோடுத் தொடங்குவேன் --
சில ஆண்டுகளுக்கு முன் எனது தோழி தனது சிறுவயது மகன் ஒருசமயம் கொடிய நோய்க்கு ஆளானதைக் குறித்து என்னிடம் கூறினாள். உடனே அவள் தன் வீட்டருகில் வசித்துவந்த தனது நம்பிக்கைக்குரிய, தனது பிள்ளையின் நோயை நலமாக்குவார் என்று நம்பிய மருத்துவர் ஒருவரை அழைத்தாள். ஆனால் அந்த மருத்துவர் அவள் அழைத்த நேரத்திற்கு வந்து சேரவில்லை. குழந்தையும் இறந்துவிட்டது. அச்சமயத்தில் அவள் ''நான் அனைவராலும் கைவிடப்பட்டவளாக, என் வலிமையை எல்லாம் இழந்தவளாக, உலகமேத் தன் சுழற்சியை நிறுத்திக் கொண்டதைப் போன்று உணர்ந்தேன்'' என்றும் கூறினாள். மாதங்கள் கடந்தன. மனம் தெளிந்து அவள் புரியதொரு வாழ்வை வாழ்வைக் கண்டுணர்ந்துக் கொண்டாள். அந்த புதிய வாழ்வை, தன் இதயத்தின் துடிப்பு ஒவ்வொன்றையும் போற்றிக் கொண்டும், ஒவ்வொரு சிரிப்பையும் இரசித்துக் கொண்டும், உணவைப் பிறருடன் பகிர்ந்துக் கொண்டும் அவள் முழுமையாகத் தழுவிக் கொண்டாள். அவள் மீண்டும் தன் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பினாள். ஆனால் அவளது துன்பத்தை முற்றிலும் துடைத்துக் கொண்டவளாக அல்ல மாறாக துன்பத்துடன் வாழ்வதற்கு கற்றுக் கொண்டு தன் இழந்த நம்பிக்கையை மீண்டும் கண்டுணர்ந்தாள்.

இன்றைய நற்செய்தியின் இலாசரின் உவமையில் நமக்கு வழங்கப்படும் செய்தியும் இதுவே. இலாசரின் இறப்பைக் கேட்ட இயேசு உடனடியாக பெத்தானியாவுக்கு விரையவில்லை. ஆயினும் இயேசுவின் துயரத்தின், அவரது நிதானத்தில் மற்றவரின் சந்தேகத்தின் மத்தியில் இறைத்திட்டம் வெளிப்படுத்தப்பட்டது. இயேசு நம்மை சாவிலிருந்து வாழ்விற்கு அழைக்கிறார். அந்த அழைப்பு நமக்கு உடல்சார் வாழ்விற்காக மட்டுமல்ல, அது நமது ஆன்மீக வாழ்விற்கும், உறவு வாழ்விற்கும், உணர்வுகளின் வாழ்விற்குமான அழைப்பாக உள்ளது.

இயேசுவின் காலத்திற்கு முற்பட்ட பக நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இறைவாக்கினர் எசேக்கியேல் இதையொத்த வாக்குறுதியையே மக்களுக்கு வழங்கு கிறார். அச்சமயத்தில் இஸ்ரயேல் மக்கள் பாபிலோனில் அடிமைகளாக இருந்தனர். தங்கள் நம்பிக்கைகள் அற்றுப் போய்விட்டதாக எண்ணினர். தங்கள் எலும்புகள் உலர்ந்து விட்டதாகவும். தங்கள் நாடும், திருக்கோலிலும் அழிக்கப்பட் விட்டன. ஆயினும் இறைவன் எசேக்கியேல் இறைவாக்கினர் வழியாக அம்மக்களுடன் பேசியபோது '' நான் உங்கள் கல்லறைகளைத் திறந்து வெளியே கொணர்ந்து உங்களை உங்கள் நாட்டில் குடியமர்த்துவேன். எனது ஆவியை உங்கள் மீதுப் பொழிவீர்கள் நீங்களும் உயிர் பெற்றெழுவீர்கள்'' என்றார். இந்த வாக்குறுதி இஸ்ரயேல் மக்களுக்கு மட்டுமல்ல. இது நம் அனைவருக்குமாக அளிக்கப்பட்ட வாக்குறுதி. நாடு கடத்தலிலிருந்து, ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்தும். நம்பிக்கயிழந்த நிலையிலிருந்தும், தனிமையிலிருந்தும் நம்மை வாழ்வீற்கு அழைக்கிறார். மீண்டும் சமுதாயத்தினருடன் இணைந்து வாழவும், நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளவும் நம்மை அழைக்கிறார்.

நாம் சாம்பல் புதன் கிழமையை நினைவிற்கொள்வோம். அன்று நாம் நமது நெற்றியில் சாம்பலைப் பெற்றுக் கொள்ளும் போது ''நீங்கள் மண்ணாக இரக்கிறீர்கள். மண்ணுக்கே திரும்புவீர்கள்'' என்ற வார்த்தைகள் கூறப்படுகின்றன. நமது மரணம் குறித்த ஒரு அப்பட்டமான நினைவூட்டல். ஆனால் இன்றைய தவக்காலம் இறப்பு என்பது நம் வாழ்வின் இறுதி வார்த்தை அல்ல என்பதை தெளிவாகக் கூறகிறது. இயேசுவின் உள்ளத்தில் உறைந்திருந்த ஆவியானவர் நம்முள்ளும் உறைகிறார். அவர் இன்றும் நம்மை வாழ்விற்காக அழைக்கிறார்.

இதை நாம் நற்செய்தியில் விரிவாகக் காண்கிறோம். இலாசரு இறந்து அடக்கம் செய்யப்பட்டு நான்கு நாள்கள் கல்லறையில் அடங்கியிருந்தார். அவரது சகோதரிகளான மார்த்தாளும் மரியாவும் அவருக்காக துக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களோடு அவர்களது நண்பர்களும் அக்கம்பக்கத்தாரும் இணைந்திருந்தனர். இயேசு தம் நண்பரின் இறப்பிற்காக அழுதுக் கொண்டிருந்தார். இயேசு திடீரென அவர்கள் மத்தியில்

பாய்ந்து துன்பங்களை ஒரேயடியாகத் துடைத்துவிடவில்லை. அவர் தம் துயரத்தை இரக்கத்தோடு அணுகினார். அவர் அங்கே நிலவியிருந்த பயங்கள், நம்பிக்கையின்மை களை தமது உடனிருப்பாலும், அன்பாலும் முற்றிலும் மாற்றினார். மார்த்தாவும் இயேசுவிடம் ''ஆம் ஆண்டவரே நீரே மெசியா, வாழும் கடவுளின் மகன் என்று நான் நம்புகிறேன்'' என்றும் கூறுகிறார்.

நான் அன்றைய பெத்தானியாவின் நிகழ்வைக் குறித்து என் மனத்தில் இவ்வாறு க்பனை செய்துப் பார்க்கிறேன். ''ஒரு துயரமும், குற்ற உணர்வும் நிறைந்த இருள் சூழ்ந்த ஒரு அறையின் வெளியே நின்றுக் கொண்டு யாரோ ஒருவர் உங்கள் பெயலைக் கூறி ''வெளியே வா''என்றுக் கூறும் குரல் உங்களுக்குக் கேட்கிறது என வைத்துக் கொள்வோம் அந்த சந்தாப்பத்தில் நீங்கள் எவ்வாறு நடந்துக் கொள்வீர்கள், என்ன பதிலிப்பீர்கள்? முதலில் நீங்கள் அதைக் குறித்து சந்தேகம் கொள்வீர்கள். அத்துடன் அச்சமும் அடைவீர்கள். ஆனால் அந்த அழைப்பே நமது உயிராக உள்ளது. இயேசுவும் நாம் தானகவே எழுந்து வெளியே வரமுடியாது அடைப்பட்டிருக்கும் கல்லறைகளான நம்பிக்கையின்மை, கசப்புணர்வுகள், குற்ற உணர்வு, அல்லது தனிமைப்படுத்தப்படல் ஆகியவற்றிலிருந்து நம்மை வெளியே வர அழைக்கிறார். அவர் நம்மை வெளியே வாரும் என அழைக்கிறார். பின்னர் நற்செய்தியில் கூறியுள்ளபடி மற்றவர்களை அழைத்து ''அவனை கட்டகளிலிருந்து அவிழ்த்து அவனைப் போக விடுங்களக்'' என்கிறார்.
புதிய வாழ்வு என்பது தனியாகப் பயணிப்பது அல்ல. அது சமுதாயத்துடன் ஒத்து வாழ்வது. அவர்களது ஆதரவு, அன்பு, அக்கறை ஆகியவற்றுடன் வாழ்வது.

நற்செய்தியிலுள்ள இலாசருவின் உவமை பல கேள்விகளை எழுப்புகிறது. ''மரணத்திலிருந்து உயிருடன் எழுப்பப்பட்ட இலாசருவின் வாழ்க்கை அதற்குப் பின் எப்படி இருந்தது? அவர் முந்தைய வாழ்விலிருந்து வேறபட்ட வாழ்வை வாழ்ந்தாரா? இவற்றைக் குறித்து நற்செய்தி மௌனமாக இருக்கிறது. நற்செய்தி இலாசருவைக் குறித்து கேள்விக்ள எழுப்பிக் கொண்டிராமல் நம்மைக் குறித்து நாமே தெரிந்துக் கொள்ள விழைகிறது. நாம் வாழ்விற்கும் இறப்பிற்கும் எப்படி பதிலளிக்கிறோம்? நமது இழப்புகளுக்கும், துன்பங்களுக்கும் எப்படி பதிலளிக்கிறோம்? நமது இரண்டாவதான வாழ்வின் சந்தர்ப்பத்தில் கடவுள் நாம் எவ்வாற வாழ வேண்டும் என விரும்புகிறார் -- இன்னும் முழுமையானவர்களாகவா? அதிக உற்சாகத்துடனா? இன்னும் அதிக அன்புடனுமா? எப்படி வாழப்போகிறோம்.

அந்த வாழ்வு எப்போதும் ஒரு அசாதாரண வாழ்வாக மட்டும் இருந்துவிடுவதில்லை. உயிர்ப்பு நம் அன்றாட வாழ்வில் நிகழ்ந்துக் கொண்டுத் தான் இருக்கின்றது. அது ஒரு தாய் தனது இரவு நேரப் பணியை நிறைவு செய்துவிட்டு தனது பிள்ளைகளுக்காக செபிக்கும் போது நிகழ்கிறது. ஒரு நடுத்தர வயதினன் தனது கோபத்தை கைவிட்டு விட்டு மன்னிக்க முற்படும் போது நடக்கிறது. மிகவும் சோர்வுற்று, ஆயாசத்தோடு சுருங்கிக் கொண்டே வந்தப் பங்குத் தளமானது மீண்டும் தன் மறைப்பணியில் தனது உ்டனிருப்பினால், தனது கரிசனையினால் துரிதமாக உயிர்த்துடிப்புடன் மீண்டும் இயங்கும்போது அங்கே அதன் உயிர்ப்பு நிகழ்கிறது. மனித வாழ்வின் எல்லைக்குட்பட்ட வாழ்வின் அத்தனை மூலைகளிலிருந்தும் கடவுள் அவனை வாழ்விற்கு அழைக்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்துக் கொண்டிருந்த தத்துவ ஞானி ஒடோ மார்குவார்ட தனது 80ஆம் ஆண்டு ''நான் எத்தகையதொரு கடவுளை நம்புகின்றேன் என்றால் நான் இறந்தப்பின் என்னை உயிர்ப்பிக்காமவ் என்னை உறங்கச் செய்பவரையே'' என்றாராம். அவர் ஒருவேளை சரியாகவே சொல்லியிருப்பார். ஏனெனில் இறப்பிற்குப் பின் நம் ஒவ்வொருவருக்கும் கிடைப்பதே ஒய்வுதானே. ஆனால் அந்த ஒய்வுக்கு முன்னே நமக்கு மீண்டும் மீண்டும் அருளப்படுவது வாழ்வே. ஒவ்வொரு புதியக் காலையீன் துவக்கம் நமக்கு ஒரு உயிர்ப்பாக உள்ளது. நாம் செய்யும் சிறு இரக்கத்தின் செயல்கள் கூட நாம் கல்லறையிலிருந்து உயிர்த்தெழும் அனுபவமே.

இயேசு நமது இறப்பை நாம் உணர்ந்துக் கொள்ள வேண்டும் என விரும்புகிறார். அந்த இறப்பு உடல்சார், ஆன்மாசாா, உணர்வுசார் இறப்பாக இருக்கலாம். ஆயினும் இவை இறுதி முடிவல்ல. அவர் நம்மை நம்பிக்கைக் கொள்ள, எதிர்நோக்குடன் வாழ, செயல்பாடுகளில் ஈடுபடவேண்டும் என்று அழைக்கிறார். அவர் தமது அறிகுறிகளைக் காண அழைக்கிறார் அதாவது பசித்தவர்களுக்கு உணவைப் பகிர்ந்தளிப்பது, உடைந்த உள்ளத்தோரை குணமாக்குவது, மன்னிப்பு வழங்குவது. தோழமை உணர்வோடு பழகுவத ஆகிய செயல்பாடுகளைக் காண அழைக்கிறார். இச்செயல்கள் எல்லாம் இறைவனின்

நிலைவாழ்வைக் குறிக்கும் செயல்களாகும். அவை இறைவனை நம்புதலுக்கும், செயல்பாடுகளில் ஈடுபடுதலுக்கும், அன்பு செலுத்தவதற்குமான அழைப்புகளாகும்.

இன்று நாம் இலாசருவின் வாழ்வை, பாபிலோனில அடிமைத்தன வாழ்வை, மக்களின் வாழ்வு இடையிலேயே பறிக்கப்படுவதைக் குறித்து தியானிக்கும் இவ்வேளையில், மேலும் நமது சொந்த வாழ்வில் நாம் சந்திக்கும் நம்பிக்கையின்மைகள், சந்தேகங்கள், ஆகியவற்றின் ஊடே ஒரு அழைப்பை கேட்கிறோம் -- வெளியே வா - என்னில் நம்பிக்கை வைத்து வாழ்" . கடவுளின் ஆவியானவர் உயிர்த்துடிப்புடன் செலாற்றிக் கொண்டிருக்கிறார். உயிர்ப்பும் உயிருமான இயேசு நம்முடன் பிரசன்னமாயிருக்கிறார். நாம் எதிர்காலத்தைக் காணமுடியாவிட்டாலும், நமது கல்லறையின் கல் புரட்ட முடியாதபடி கடினமானதாக இருந்தலும், நமது துக்கங்கள் முடிவற்றவையாக இருந்தாலும் நமக்கு ஒரு வாழ்வு இருப்பது நிச்சயம். அதற்கான அழைப்பும் நிச்சயம்.

இந்த மறையுரையை நான் ஒரு கதையுடன் முடிக்க விரும்புகிறேன். சிறிய கிராமத்தில் வாழ்ந்த ஒரு பெண் தன் ஒரே குழந்தையை இழந்து விட்டாள். எனவே அவளால் உண்ண வோ உறங்கவோ முடியவில்லை. அவளுக்குத் தன் வாழ்வை வாழவே பிடிக்கவே இல்லை. ஒருநாள் அவள் தன் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருந்த ஆற்றங்கரைக்குச் சென்றாள். அங்கே அவள் அமைதியாக அமர்ந்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அழுகை வந்தது. அப்பக்கம் வந்த அவளது அண்டை வீட்டவர் அவளைக் கண்டு அவள் பக்கத்தில் அமர்ந்தாள். இருவரும் பேசவே இல்லை. இருவரும் ஒருவருக்கொருவர் உடனிருந்தனர். சிறிது நேரம் கழித்து அவள் எழுந்தாள். அது உயிர்த்துடிப்புடனான எழுதலாக இருந்தது. அவள் தன் கல்லறையிலிருந்து வெளிவந்து விட்டாள். அது ஒரு அருங்குறியால் அல்ல ஆனால் அன்பின் வழியாக, துன்பங்களைப் பகிர்ந்துக் கொண்டதால், மனித இதயத்தின் வழியாக கடவுளின் நண்ணியக் குரலின் அழைப்பால் அது நிகழ்ந்தது. அதன் பின்னர் அவளது வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்பியது. அவள் கண்ட கதிரவன் ஒளியும், பறவைகளும், அண்டை வீடாரின் சிரிப்பும் அவளை மாற்றின. அவள் மற்றவர்களுடன் பேச ஆரம்பித்தாள். அவர்கள் மீது அக்கறைக் கொணடாள். வாழ்வை முழுமையாக வாழ ஆரம்பித்தாள். அவளது வாழ்வு அவளுக்க எக்காள முழக்கங்களுடன் திரும்ப வரவில்லை. ஆனால் அது அமைதியாக, ஆழந்த மௌனத்தில், மென்மையாக ஆனால் உறுதியாக திரும்ப வந்தது.

அன்பு நண்பர்களே நம் ஆண்டவர் இயேசு வாழ்விற்கு நம்மை இன்று அழைக்கிறார் அவர் நம்மை நமது வருத்தங்கள், நமது குறிப்பிட்ட அளவீடுகள், நமது பயங்களி, நமது இதயத்திலுள்ள கல்லறைகளிலிருந்து வெளியே வர அழைக்கிறார். அவர் நம்மிடம் "வெளியே வா. உன் கட்டுக்களிலிருந்து உடைத்துக் கொண்டு வா வாழ்வை முழுமையாக வாழ்" என்று அழைக்கிறார். நாம் அவறறிற்கு பதில் மொழியாக நாம் அவரை நோக்கி செல்வோமானால், மற்ற மனிதர்களையும் நோக்கிச் செல்வோமானால், நாம் அவர் வழங்கவிருக்கும் அந்த வாழ்வை அதன் நிறைவில்,, அதன் முடிவற்றத் தன்மையில் அதன் பேரொளியில அது துவங்கிவிட்டதை நம்மால் காண முடியும் - ஆமென்.